[2010 மே 11

கொள்முதல் விலையை பசும் பாலுக்கு 5 ரூபாய் 50 காசும், எருமைப் பாலுக்கு 10 ரூபாய் 50 காசும் உயர்த்தியிருக்கிறோம். ஆனால், பால் விற்பனை விலையை 5 ரூபாய் 25 காசுகள் மட்டும், அதாவது குறைவாகத்தான் வைத்திருக்கிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமாகத் தொகை கொடுத்து, பால் கொள்முதல் செய்து வருகிறோம் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நேற்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) நான்தான் கேட்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(ஆ) விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மருத்துவ சிகிச்சைக்காகத் தமிழகத்திற்கு வர மத்திய அரசு அனுமதி அளித்தது

*** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் இந்த அவைக்கு அளித்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனினுடைய தாயார் பார்வதி அம்மாள் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியின்பேரில்

2010 மே 11] *[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]*

மனிதாபிமான, மனிதநேய அடிப்படையில் அவர்கள் இங்கே வந்து தங்கி, சிகிச்சை பெறுவதற்கான அனுமதியினை மத்திய அரசு அளித்ததை இந்த மாமன்றத்தினுடைய தகவலுக்குத் தந்திருக்கின்றார்கள்.

இன்றையதினம் சில பத்திரிகைகளிலே திருமதி பார்வதி அம்மாள் அவர்கள் அரசு அளித்த இந்த அனுமதியை நிராகரித்துவிட்டதாகவும், அவர் மேல் தேவையற்ற நிபந்தனைகள் சுமத்தப்பட்டதாகவும், மனிதாபிமானமற்ற அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, அவர் இங்கே வர விரும்பாத காரணத்தினால் மீண்டும் அவர் இலங்கைக்கே சென்றுவிட்டார் என்கிற தகவலைப் பல்வேறு பத்திரிகைகள் இன்று காலையிலே பிரசுரித்திருக்கின்றன. தங்கள்மூலமாக நாங்கள் அறிய விரும்புவது இதைப் பற்றிய தகவல் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருக்குத் தரப்பட்டிருக்கிறதா?

நம்முடைய முதலமைச்சருடைய பெருமுயற்சியின்பேரில், அவர்கள் தனிப்பட்ட முறையில் மத்திய அரசிடம் பேசி, சிறப்பு அனுமதியைப் பெற்றுத் தந்த பின்பு, அந்தச் சிறப்பு அனுமதி இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறதா? அப்படி நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சிலர் சொல்வதுபோல, திருமதி பார்வதி அம்மையார் அவர்கள் தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று தெரியாத ஒரு நிலையிலே இருக்கிறார். ஆகவே அவரை வைத்து சிலர் அரசியல் ஆதாயம் தேடுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிதான் இது என்பதைப் போன்ற தகவல்கள் வந்திருக்கின்றன! அவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வருவதன்மூலம், வேறு சில நபர்களும் அவர்களோடு தமிழகத்திற்கு வர முயற்சித்தார்கள்; ஆனால் இன்று அது நடக்காது என்று தெரிந்த பிறகு, அவர்கள் அந்த அம்மையாரை இலங்கைக்கு அழைத்துச் சென்றுவிட்டதாகவும் சொல்கிறார்களே?

இதைப் போன்ற பல்வேறு தகவல்கள் இன்று பத்திரிகைகளிலே நடமாடுகின்ற காரணத்தினால்—சிலபேர் நம்முடைய முதலமைச்சர் அவர்களைக்கூட மனித நேயமற்றவர், ஈவிரக்கமற்றவர், இவர் நினைத்திருந்தால் அவர்களை அனுமதித்திருக்கலாம் என்றெல்லாம் மிகப் பெரிய போராட்டமும், ஆர்பாட்டமும் நடத்தினார்கள். இன்று மத்திய அரசுக்கு வழிகாட்டுகின்ற அன்னை சோனியா காந்தி அவர்கள் மனித நேயத்தினுடைய மொத்த உருவம் என்பதை

TRUTH ALONE TRIUMPHS

நிரூபிக்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) பகைவனுக்கும் அருள்வாய் நெஞ்சே என்று சொல்கின்ற அந்த அற்புதமான தத்துவத்தின் அடிப்படையில், அவர்கள் வருகை தந்து இங்கே சிகிச்சை பெற வேண்டும் என்று சொன்ன பிறகும்கூட, அது நிராகரிக்கப்பட்டு, அவர்கள் சென்றுள்ளதாகச் சொல்கிறார்களே, அதைப் பற்றிய தகவல்கள் ஏதேனும் உண்டா என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு முதலமைச்சரிடமிருந்து அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை, அவர் பத்திரிகைகளிலே படித்துத் தெரிந்து கொண்டதாகச் சொல்லப்படுகின்ற ஒரு செய்தியே தவிர, அதிகாரப்பூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ திருமதி பார்வதி அம்மையார் அவர்களிடமிருந்து எந்தவிதமான பதிலும் இந்த அரசுக்கு வரவில்லை. “உங்களுடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள இயலாது” என்ற கருத்து அமைந்த கடிதம் அவர்களால் அனுப்பப்படவில்லை.

இன்னும் சொல்லப்போனால், எந்தக் கடுமையான நிபந்தனைகளும் அம்மையார் அவர்களுக்கு விதிக்கப்படவில்லை. அவர்கள் அரசின் பாதுகாப்பில் இருக்க வேண்டும்; பாதுகாப்பு என்றால் “சிறைக் கோட்டம்” போன்ற பாதுகாப்பு அல்ல; போஷாக்கில் – ஒருவர் உடல்நலம் இல்லாமல் வரும்போது, அவரைக் காப்பாற்ற – அவருக்கு பரிந்து பணிவிடைகள் செய்ய – மருந்தளிக்க, தக்க டாக்டர்களிடத்திலே அவரது உடலைப் பரிசோதிக்க ஏற்றவொரு மருத்துவமனையிலே அவரைத் தங்க வைத்து, அடிக்கடி கவனித்துக் கொள்கின்ற அந்த முயற்சிகளை மேற்கொள்ள அரசின் பாதுகாப்பிலே இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதே தவிர, கடுமையான நிபந்தனைகள் எதுவும் அவர்களுக்கு விதிக்கப்படவில்லை. நிபந்தனைகளே எதுவும் விதிக்கப்படாத காரணத்தால், அவரைத் தாராளமாக – ஏற்கெனவே தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு தொடர்புகொள்ளவோ, தொடர்பு உள்ளவர்களோடு நட்பு கொள்ளவோ கூடாது என்பதுதான் நிபந்தனை.

2010 மே 11] [கலைஞர் மு. கருணாநிதி]

தடை செய்யப்பட்ட இயக்கங்களோடு ஒரு பிரதானமான, விளம்பரம் பெற்ற, மிக முக்கியமான ஒரு பிரமுகருடைய தாயார் இங்கே வந்து தங்கி இருக்கும்போது, அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே யாரும் அரசியல் நடத்துவதற்கு இடம் தராத வகையிலேதான், இந்த அரசு அத்தகைய நிபந்தனைகளை, "நீங்கள் ஏற்றுக்கொண்டால்தான் போச்சு; இல்லாவிட்டால் உங்களை இங்கே அனுமதிக்க முடியாது" என்று கூடச் சொல்லவில்லை. அவர்களுக்கு ஒரு "அட்வைஸ்" என்பதைப் போல, "நீங்கள் இங்கே வந்து தங்குங்கள்; சிகிச்சை பெறுங்கள். தகுந்த மருத்துவமனையிலே உங்களை அனுமதித்து, திறமையான டாக்டர்கள்மூலமாக உங்களுடைய உடல்நிலையைப் பரிசோதித்து ஏற்ற வைத்தியங்களைச் செய்கிறோம். ஆனால், அந்த நேரத்திலே உங்களை வைத்து யாராவது அரசியல் நடத்த விரும்பினால், அதற்கு நீங்கள் இடம் தரக்கூடாது" என்று கனிவோடு அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் – "அறிவுரை" என்று சொல்ல முடியாது. வேண்டுகோள் விடுத்து – அவர்களை இங்கே அனுமதிக்கத் தடையில்லை என்று மத்திய அரசு, மாநில அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. மாநில அரசும் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்கின்ற இந்தச் செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

ஒரு காலம் இருந்தது. கிராமப்புறங்களிலே ஒரு செய்தியைப் பத்திரிகைகளிலே படித்துவிட்டுச் சொன்னால், அப்பொழுதெல்லாம் "அதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்பார்கள். "பத்திரிகைகளிலே வந்திருக்கிறது" என்று சொன்னால், "அப்படியா! பத்திரிகைகளிலேயே வந்து விட்டதா?" என்று அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் வரும். இந்தக் காலத்தில் "பத்திரிகைகளில் செய்திகள் வந்திருக்கின்றன" என்று சொன்னால் "பத்திரிகைகளில்தானே செய்தி வந்திருக்கிறது" (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்கின்ற அளவிற்கு பத்திரிகைச் செய்திகளாகிவிட்ட இந்தக் காலத்தில் பார்வதி அம்மையார் அவர்களுடைய திட்டவட்டமான பதில் வரும் வரையில், திரு. பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்கள் இதனை நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.